GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4A** **5420–22**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LAW OF EVIDENCE

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "May Presume, Shall Presume And Conclusive Proof are the three main principles of the Indian Evidence Act" – Discuss.

   "துணிபு கொள்ளலாம், துணிபிடல் வேண்டும் மற்றும் அறுதி துணிபு ஆகிய மூன்றும் இந்திய சாட்சிய சட்டத்தின் முக்கிய கொள்கைகளாகும்"– விவாதிக்கவும்.

2. State the necessary ingredients for making Dying Declaration as a valid evidence.

   மரண வாக்குமூலத்தை, முக்கிய சாட்சியமாக எடுத்துக் கொள்வதற்கு தேவையான முக்கிய உட்கூறுகள் யாவை என கூறவும்.

3. Examine the different kinds of examinations necessary for a defence advocate.

   எதிர் தரப்பு வழக்கறிஞருக்கு தேவையான பல்வேறு வகையான விசாரணைகளை ஆராயவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the importance of character evidence in civil and criminal cases.

   உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் குணாதிசய சாட்சியத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

5. What are the essentials to prove Alibi Evidence?

வேற்றிட வாத சாட்சியத்தினை நிரூபிப்பதற்கு தேவையான அம்சங்கள் யாவை?

6. Discuss the principles of Burden of Proof.

மெய்ப்பிக்கும் சுமையின் கொள்கைகளை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Leading question

விடை அமை வினா

(b) Confession to police officer

காவல்துறை அதிகாரியிடம் குற்ற ஏற்புரை

(c) Expert opinion

வல்லுநர் கருத்து

(d) Oral Evidence

வாய்மொழி சாட்சியம்

(e) Ambiguity

பொருள் மயக்கம்

(f) Secondary Evidence

இரண்டாம் நிலை சாட்சியம்

(g) Estoppel

முரண்தடை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A prosecution witness was asked whether he had quarrelled with the family of the accused but he denied it. Whether evidence can be adduced to prove the facts of the quarrel?

குற்றம் சாட்டப்பட்டவரின் குடும்பத்திற்கு எதிராக தகராறு ஏதேனும் செய்தாரா என அரசுத் தரப்பு சாட்சியிடம் கேட்கப்பட்டது. சாட்சி அதனை மறுத்தார். தகராறு நடந்தது பற்றிய நிகழ்வை குறித்து அதனை மெய்ப்பிக்க சான்றளிக்க இயலுமா?

9. The husband while returning home in two wheeler caused death of a person who was crossing the road. The husband told the facts to his wife. Whether wife can give evidence against the husband in court?

இருசக்கர வாகனத்தில் கணவர் வீடு திரும்பும் பொழுது, பெருஞ்சாலையைக் கடக்க முயன்ற ஒருவரை இடித்து மரணம் ஏற்படுத்துகிறார். அச்சம்பவத்தை மனைவியிடம் கூறுகின்றார். நீதிமன்றத்தில் மனைவி கணவருக்கு எதிராக சாட்சியம் கூற முடியுமா?

10. A, orally tells B that he had seen C murdering D. Decide the admissibility of it.

'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம் 'இ' என்பவர் 'ஈ' என்பவரை கொலை செய்ததை பார்த்ததாக வாய் மொழியாக கூறினார்-அதனுடைய ஏற்புத் தன்மையை முடிவு செய்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023

Register No. | | | | | | | | |

TA4B

5421–22

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Second year – Fourth Semester

# ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Administrative Law and elucidate the reasons for the growth of Administrative Law.

   நிர்வாகவியல் சட்டம் என்பதை வரையறுத்து, அதன் வளர்ச்சிக்கான காரணங்களை தெளிவுபடுத்துக.

2. Discuss with decided cases the circumstances in which natural justice need not be followed.

   இயற்கை நீதியானது எந்தெந்தச் சூழ்நிலைகளில் பின்பற்ற வேண்டாம் என்பதை முடிவு செய்யப்பட்ட வழக்குகள் வாயிலாக விவாதிக்கவும்.

3. Explain how far the system of Ombudsman is helpful in controlling the acts of administrative authorities with specific reference to India.

   நிர்வாகத்துறையின் செயல்பாடுகளை எந்த அளவிற்கு அம்புட்சுமேன் முறை கட்டுப்படுத்துகிறது என்பதனை இந்தியாவை முக்கியமாக கருத்தில் கொண்டு விளக்குக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the development of Administrative Tribunals in accordance with the Constitution of India.

   இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நிர்வாகத் தீர்ப்பாயங்கள் வளர்ச்சியுற்றுள்ளதனை எடுத்துரைக்க.

5. Discuss the principles of excessive delegation of delegated legislation.

அளவிற்கதிகமான விதி ஆக்க அதிகார ஒப்படைவு குறித்த கோட்பாடுகளை விவாதிக்க.

6. Explain the Contractual Liability of the State with specific reference to R.D. Shetty v. International Airport Authority of India Case. AIR 1979 SC 1628.

அரசின் ஒப்பந்தம் குறித்த கடப்பாட்டை, ஆர்.டி. செட்டி எதிர். இந்திய பன்னாட்டு விமான நிலையக் குழுமம் AIR 1979 S.C. 1628 வழக்குடன் தொடர்பு படுத்தி விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக. :

(a) Writ of Quo Warranto

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை

(b) Public Corporations

பொது நிறுவனங்கள்

(c) Donoughmore Committee

டோனக்மோர் குழு

(d) Lokpal

லோக்பால்

(e) A.K. Kraipak v. Union of India

எ.கே. கிரைபக் எதிர் இந்திய ஒன்றிய அரசு

(f) Administrative directions

நிர்வாக முறை ஏவுரைகள்

(g) Speaking Orders

காரணத்தோடு கூடிய ஆணைகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. In the Calcutta Corporation, the rule on taxing was amended to include the computer centres within the Municipal Corporation taxing limits. The same was challenged on the ground of not giving notice and hearing. Decide.

கல்கத்தா மாநகராட்சி தன்னுடைய எல்லைக்குள் கணினி மையங்களை உட்படுத்தி தன்னுடைய வரிவிதிப்பு விதிகளை திருத்தம் செய்கின்றது. அதனை அறிவிப்பு மற்றும் கேட்பு செய்யப்படவில்லை என்ற அடிப்படையில் எதிர்க்கப்படுகின்றது. தீர்மானிக்க.

9. A regulation was framed by the Bank of Bombay providing for termination of service of the woman receptionist on her first pregnancy. Decide the validity of the regulation.

பெண் வரவேற்பாளரின் முதல் கருவுற்றலில் பணி நீக்கம் செய்யப்படுவார் என்ற நெறிமுறையை பாங்க் ஆப் பாம்பே வகுக்கின்றது. அந்த நெறிமுறையின் ஏற்புத் தன்மையை தீர்மானிக்க.

10. 'X', a prisoner, filed a writ petition in the High Court alleging that unsatisfactory and inhuman conditions were prevailing in the prison. Whether 'X' has got "locus standi' to file such writ petition and is it maintainable?

'X' என்ற ஒரு கைதி சிறையின் உள்ளே உள்ள திருப்திகரமற்ற மற்றும் மனிதாபிமானமற்ற சூழ்நிலையை மேற்கோள்காட்டி உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கிறார். அவ்வாறு வழக்குத்தொடுக்க அவருக்கு 'வழக்கிடும் உரிமை' உள்ளதா? அந்த வழக்கு நிலைக்குமா?

————

(3)

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 20..
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4C** **5422–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define collective bargaining and evaluate the essential ingredients for the success of collective agreements in India.

   கூட்டுப் பேரத்தினை வரையறை செய்து, கூட்டுப்பேர ஒப்பந்தம் இந்தியாவில் வெற்றி பெற முக்கியமான கூறுகளை ஆய்வு செய்க.

2. What is meant by 'Retrenchment'? Discuss the provisions relating to retrenchment.

   ஆட்குறைப்பு என்றால் என்ன? ஆட்குறைப்பு சம்பந்தமான பிரிவுகளை விவாதிக்கவும்.

3. How the wages are paid and what are the deductions allowed under the Payment of Wages Act, 1936?

   1936ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் ஊதியம் எவ்வாறு வழங்கப்படுகிறது மேலும் அச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கழிவுகள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define Trade Union and explain the procedure for registration of Trade Unions as mentioned under the Trade Unions Act, 1926.

   தொழிற்சங்கத்தினை வரையறை செய்து மேலும் தொழிற்சங்கங்களை பதிவு செய்ய வேண்டிய நடைமுறைகளை தொழிற்சங்கங்கள் சட்டம் 1926 குறிப்பிட்டுள்ளதை விளக்குக.

5. Define strike. Explain the restrictions imposed in the Industrial Disputes Act, for undertaking a strike by workmen.

வேலைநிறுத்தத்தை வரையறை செய்து தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை விளக்குக.

6. Explain the procedure for fixing and revising Minimum Wages under the Minimum Wages Act 1948.

குறைந்தபட்ச ஊதியச்சட்டம் 1948ன் கீழ், குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயம் செய்ய மற்றும் மாற்றி அமைக்க உள்ள நடைமுறைகளை விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக. :

(a) Award

தீர்வம்

(b) Theories of Wages

ஊதியக் கோட்பாடுகள்

(c) Domestic Enquiry

உள் விசாரணை

(d) Advisory Board

ஆலோசனைக்குழு

(e) Living Wage

வாழ்க்கை ஊதியம்

(f) Industrial Dispute

தொழிற்தகராறு

(g) Public utility services

பொதுப் பயன்பாட்டுப் பணிகள்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Registered Trade union makes an application to the Registrar of Trade union for a change of its name duly signed by less than 2/3 of its members and the same was sent to the Registrar. Decide the validity of the application.

ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கமானது தன்னுடைய பெயரினை மாற்றக்கோரி 2/3 கீழ் குறைவான உறுப்பினர்களின் கையொப்பம் பெற்று அந்த மனுவினை பதிவாளருக்கு அனுப்பி வைக்கிறது. அந்த மனுவின் செல்லத்தக்க தன்மையினை முடிவு செய்க.

9. A group of workmen demand that they should be paid a 'Fair Wage' under the Minimum Wages Act. The employer states that he is duty bound to pay only a 'Minimum Wage' which he was doing. State whether the Authority under the Act can entertain this claim of the workmen?

தொழிலாளர்களின் ஒரு பகுதியினர் தங்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் 'நியாயமான ஊதியம்' வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கின்றனர். முதலாளி, தான் குறைந்தபட்ச ஊதியம் வழங்க கடமைப்பட்டவர் என்றும், அதனை செய்து வருவதாகவும் கூறுகின்றார். தொழிலாளர்களின் இந்த கோரிக்கையினை, இச்சட்டத்தின் கீழ் கோருரிமைகளை தீர்மானிக்கும் அதிகாரமுடையவர்கள் ஏற்றுக் கொள்வரா என்று எடுத்துரைக்க.

10. In a factory where 100 workmen are working, only 20 workers raise a dispute regarding Wages and Bonus. Decide whether the dispute raised by them will come within the purview of Industrial Dispute under the Industrial Disputes Act. Give reasons.

100 பேர் வேலை செய்கின்ற தொழிற்சாலையில், வெறும் 20 பேர் மட்டும் ஊதியம் மற்றும் மீதூதியம் சம்பந்தமாக கேட்டு தொழிற்தகராறினை எழுப்புகின்றனர். அது தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் தொழிற்தகராறு என்ற வரையறைக்குள் வருமா என்று முடிவு செய்து காரணங்கள் கொடுக்கவும்.

---

(4)

GOVERNMENT LAW COLLEGE TRICHY
15 MAY 2023
LIBRARY

Register No.

**TA4D**

**5423-22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the role played by the General Assembly when the Security Council failed to protect International peace and security.

   பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை காக்க பாதுகாப்புச் சபை தவறிய போது பொதுச்சபையின் பங்கை ஆராய்க.

2. List out 12 salient features of the UN Convention on the Law of the Sea, 1982.

   1982-ம் ஆண்டின் கடல் சட்டம் பற்றிய ஐ.நா. சாசனத்தின் 12 முக்கிய குணாதிசயங்களை பட்டியலிடுக.

3. Analyse the scope of state responsibility especially in the light of the ICJ's decision in the 'Corfu channel case' and the 'Trail-Smelter Arbitration'.

   பன்னாட்டு நீதிமன்றத்தின் 'கார்ஃபூ கால்வாய்' வழக்கின் தீர்ப்பு மற்றும் 'டிரயில் காரீயம் உருக்கு' இசைவுத்தீர்ப்பின் அடிப்படையில் நாட்டின் பொறுப்புநிலையின் நோக்கெல்லையை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the various stages in formation of an International Treaty?

   ஒரு பன்னாட்டு உடன்படிக்கை உருவாவதற்கான பல்வேறு படிநிலைகள் யாது?

5. Examine with case laws how the Indian Courts apply International Law in the Municipal sphere.

இந்திய நாட்டிற்குள் நாட்டிடைச் சட்டத்தை இந்திய நீதிமன்றங்கள் எவ்வாறு அமல்படுத்துகிறது என்பதை சட்டத்தீர்ப்புரைகள் மூலம் ஆராய்க.

6. Discuss about the rights of the succeeding state with respect to 'localised treaties' by referring to Gabcikovo-Nagymaros Dam Project Case.

கேப்சிகோவோ - நேகிமேரோஸ் அணை கட்டுமான வழக்கை மேற்கோள் காட்டி, 'உள்ளாட்சி நிருவாகம் தொடர்புடைய உடன்படிக்கைகள்' பொருத்து இறங்குரிமை பெற்ற நாட்டின் உரிமைகள் பற்றி விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) International custom

சர்வதேச வழக்காறு

(b) Loss of Nationality

நாட்டுரிமை இழத்தல்

(c) Rule of Double Criminality

இரு நாடுகளிலும் குற்றம் என்கிற விதி

(d) Art. 51 of the Indian Constitution

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுபு 51.

(e) Holy See

புனித நாடு

(f) Duties of a consulate

வணிகத்தூதரகத்தின் பணிகள்

(g) International Tribunal for the Law of the Sea (ITLOS)

கடல் சார் சட்டம் பற்றிய சர்வதேச தீர்ப்பாயம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An Indian interior designer entered into a contract with South African embassy in New Delhi to beautify the embassy. The consideration is 30 crores but the South African embassy refuses to pay the contract amount and claims diplomatic immunity. The Indian contractor files a writ petition in the Supreme Court. Can he succeed?

புதுதில்லியில் உள்ள தென்ஆப்பிரிக்க நாட்டின் தூதரகத்தை அழகுபடுத்த ஓர் இந்திய உள் அலங்கார நிபுணரிடம் ஒப்பந்தம் போடப்பட்டு முடிக்கப்பட்டது. தங்களுக்கு தூதரக விலக்குரிமை இருப்பதாக கூறி ஒப்பந்தத் தொகையான ரூ.30 கோடியை தென் ஆப்பிரிக்க தூதரகம் தர மறுக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் இந்திய நிபுணர் நீதிப்பேராணை மனு ஒன்றை தாக்கல் செய்கிறார். அவர் வெல்வாரா?

9. State 'A' was bifurcated into states 'A' and 'B'. State 'A' has a bigger land mass and was originally the member of the UNO. Now state 'B' claims that only state 'B' is the original member of the UNO and approaches ICJ. Decide.

'A' என்கிற நாடு இரண்டாக பிரிந்து 'A' மற்றும் 'B' என்று இரண்டு தனி நாடுகளாயின. தற்போது 'A' நாடு பெரிய நிலப்பரப்பைக் கொண்டு ஐ.நா. சபையின் அசல் உறுப்பினர் நாடாக திகழ்கிறது. ஆனால் 'B' நாடு தாங்கள் தான் ஐ.நா. சபையின் அசல் உறுப்பினர் என்று கூறி சர்வதேச நீதிமன்றத்தை நாடியது. தீர்மானிக்கவும்.

10. A ship belonging to country 'X' but registered in country 'Y' engaged in smuggling contraband goods from country 'Y' to country 'Z'. The ship was sunk by coastguards of country 'Z' in the high seas on hot pursuit. Country 'Y' claims damages from country 'Z'. Decide.

'Y' நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஆனால் 'X' நாட்டிற்கு சொந்தமான ஒரு கப்பல் 'Y' நாட்டிலிருந்து 'Z' நாட்டிற்கு அரசுக்கு எதிரான சரக்குகளை கடத்துவதில் ஈடுபட்டிருந்தது. 'Z' நாட்டின் கடலோரக் காவல் படையானது நெடுங்கடலில் அக்கப்பலை துரத்திப்பிடித்து அழித்தது. 'Z' நாட்டிடமிருந்து 'Y' நாடு இழப்பீடு கோரி வழக்காடியது. தீர்மானிக்கவும்.

———————